# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (திருத்தச்) சட்டம்

---

*[1990, யூன் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1990, யூன் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30

தபாற் செலவு: ரூபா 1.00

# 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (திருத்தச்) சட்டம்

[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச. வ.—ஒ. 37/89

**1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய அபாய கரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "நடாத்துவதற்கும் பொறுப் பேற்றுக்கொள்வதற்கும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நடாத்துவதற்கும், பொறுப்பேற்றுக் கொள்வதற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் 'முகவர் நிலையங்களுடனும் தொடர்பினைப் பேணி வருவதற்கும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'முகவர் நிலையங்களுடனும் தொடர்பினைப் பேணி வருவதற்கும் ; அத்துடன்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) பின்வரும் புதிய பந்தியை அப்பிரிவின் முடிவில் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஏ) எதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கு விடல், ஈடு வைத்தல், பிணையம் வைத்தல் அத்துடன் விற்றல் அல்லது வேறு விதமாகக் கையுதிர்ப்பதற்கும்.'.

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 13 ஆம் பிரிவைச் சேர்த்தல்.

3. பின்வரும் புதிய பிரிவு 12 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் சேர்க்கப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"சபைக்கு முடிக்குரிய ஆதனத்தின் விசேட அளிப்பு அல்லது குத்தகை.

13. சபையின் நோக்கங்களுக்காக முடிக்குரிய ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைப்படுமிடத்து அத்தகைய நோக்கம், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் செய்யப்படக்கூடியதான அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பின் அல்லது குத்தகையின் நோக்கமாகக் கருதப்படல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் சபைக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்புக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா [illegible]77 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.